## திருநெல்வேலி சந்தையின் வெற்றிக் கதை:

திரு. முகம்மது இப்ராஹிம்,
123, கண்ணம்மன் கோயில் வீதி,
திருநெல்வேலி சந்திப்பு.
அலைபேசி : 9894660260



---

எனது பெயர் முகம்மது இப்ராஹிம், திருநெல்வேலி மொத்த விலை சந்தையில் மொத்த விலை பழக்கமிஷன் கடை நடத்தி வருகிறேன். அனைத்துத் தரப்பான பழங்களின் விலையை நிர்ணயம் செய்வதில் மொத்த விலை பழ விற்பனையாளர்களில் நானும் ஒருவர். என்ன தான் அரசாங்க உத்தரவு முறைகள் இருந்தாலும் மொத்த விலை வியாபாரிகளே விலையை நிர்ணயம் செய்வதில் முக்கியமானவர்கள் ஆவர்.

விலையை நிர்ணயிப்பதில் எற்த ஒரு நிர்பந்தமான முறையும் கிடையாது. குறிப்பிட்ட பழ வகைகளின் தரத்தையும், கிராக்கியையும் பொறுத்தே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. காய்கறிகளைப் போல பழவகைகளும் தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகள் மட்டுமல்லாது இந்தியாவின் வெளி மாநிலங்களில் இருந்து கூட வரவழைக்கப்படுகிறது. மேலும் சில நேரங்களில் குறிப்பிட்ட பழ வகைகள் வெளிநாடுகளில் இருந்து கூட இறக்குமதி செய்யப்படுகிறது. அனைத்துக் காரணங்களையும் வைத்துப் பார்க்கும் போது பழங்களின் விலையை நிர்ணயம் செய்வது சுலபமான காரியம் இல்லை என்பதால் அருகில் உள்ள பெரிய சந்தைகளை மதுரை மற்றும் விருதுநகர் சந்தைகளின் விலைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டி உள்ளது.

இது நடைமுறைக்கு கஷ்டமான காரியம் என்பதால் நாங்கள் வேறு ஊர்களில் உள்ள வியாபாரிகளையே தேவைப்படுகிற சூழ்நிலை உள்ளது.

இந்த சூழ்நிலையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி மையம் மூலம் தினசரி சந்தை நிலவரம் என்ற திட்டம் தொடங்கப்பட்டது.

என்னதான் இந்தத் திட்டம் விவசாயிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டாலும் கூட நாங்களும் இதனைப் பயன்படுத்திக் கொள்கிறோம். நாங்கள் இதை சந்தை ஆய்வாளர் மூலம் அறிந்த போது நீண்டகாலம் நாங்கள் எதிர்பார்த்து இருந்ததால் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்தச் சந்தை மாலை 6.00 மணியில் இருந்து காலை 6 மணி வரை நடந்து கொண்டிருக்கிறது. இரவு வேலைகளில் எங்களுக்கு மற்ற சந்தைகளின் மாலை 4மணி நிலவரம் தேவைப்படுகிறது. தினசரி சந்தை நிலவரத்தின் மூலம் நாங்கள் தமிழ்நாட்டில் உள்ள பெரிய சந்தைகளின் விலை நிலவரத்தை மதியம் 2 மணிக்குள் பெற முடிகிறது. பெரும்பாலான பழங்கள் முன் பதிவினால் நீண்ட தூரத்திலிருந்து வருகின்றன. சில குறிப்பிட்ட பருவங்களில் பழங்கள் அதிகளவில் வருகிறது. இந்த காலங்களில் விலைகள் வழக்கம் போல குறைவதோடு மற்ற நேரங்களில் ஒரு விலை உயர்வு ஏற்படுகிறது. இதுவரை பதப்படுத்த வசதிகள் இங்கு இல்லாததால் கொள்முதல் செய்த பழங்களை ஓரிரு நாட்களுக்குள் விற்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆனாலும் விலைகள் மாறாமல் இருப்பதோடு முந்தைய நாள் மற்றும் இன்றைய நாளின் சந்தை விலையை அனுசரித்து விலை அமைகிறது.

அனைத்தையும் வைத்துப் பார்க்கும் போது இந்தச் சேவை எங்களுக்கும் விவசாயிகளுக்கும் மிகவும் உதவியாக உள்ளது. எதிர்காலத்தில் இந்தச் சேவை இந்தியாவில் உள்ள அனைத்து சந்தைகளின் விலையையும் அளிக்கும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். மிகவும் நன்றி.